நாள்.10.10.2025
அசல் வழக்கு எண். 133/2023
பி.வா. சா.1
பெயர். மீனாட்சி
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

வழக்கு வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வீடு அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து எனக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எனக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீடு வேண்டும் என ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 உயில் ஆவணம் யார் யாருக்கு எழுதிவைத்தது என்றால் எனது மாமனார் எனது கணவருக்கு எழுதியதாக கேள்விபட்டேன். உயில் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் பிறர் படிக்க கேட்டு தெரிந்து கொண்டேன். உயில் எழுதப்பட்ட தேதி தெரியுமா என்றால் தெரியாது. உயில் யார் முன்னிலையில் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. உயிலில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. உயில் எழுதும் காலத்தில் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

எனது கணவர் உயிருடன் இருக்கும் பொழுது உயில் பற்றி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. எனது மாமனார் எந்த ஆண்டு காலம் சென்றார் என்றால் எனக்கு தெரியாது, 45 ஆண்டுகள் இருக்கும். எனது கணவர் இறந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 3 வருடங்கள் இருக்கும். உயில் இருக்கும் விவரம் எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் 7 வருடங்களுக்குள் தெரிய வந்தது. 11.11.2019 ம் தேதி 2 ம் வாதி அவரது சகோதரர் இசக்கியப்பனுக்கும் எனது கணவர் இசக்கிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு எனது கணவர் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.

மேற்படி பதில் அறிவிப்பில் உயில் இருக்கும் விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. உயில் எந்த சார்பதிவாளர்

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. உயில் பதிவு செய்யப்பட்டதா பதிவு செய்யப்படாததா என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டின் கதவு எண் 5/117 ஆகும். உயில் படி தான் எனக்கு தபசில் சொத்து பாத்தியம் என்றால் சரிதான், 45 வருடங்களாக நான் தபசில் சொத்து தான் குடியிருந்து வருகிறேன். உயில் 1984 ம் வருடம் எழுதப்பட்டதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எத்தனை வருடங்களாக நான் தீர்வை செலுத்தி வருகிறேன் என்றால் வீட்டில் குடியிருக்கும் காலத்திலிருந்து தீர்வை செலுத்தி வருகிறேன். பி.வா.சா–ஆ 2,3,4 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு எண்ணும் தாவா சொத்தின் கதவு எண்ணும் வெவ்வேறு என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் கதவு எண் 2 ம் வாதியின் தாயார் பிச்சம்மாள் என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2,3,4 ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 2 ம் வாதியான சிதம்பரம் மற்றும் அவரது சகோதரர் இசக்கியப்பன் பெயரில் உள்ளது.

இசக்கியப்பன் என்பவருக்கு இந்த வழக்கு நடக்கும் விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் இசக்கியப்பனுக்கு வீடு கட்ட நான் இடம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நடக்கும் விவரம் இசக்கியப்பனுக்கு தெரியும் என்றாலும் இசக்கியப்பன் 2 ம் வாதிக்கு அவரது பாகத்தை வாய்மொழியாக கொடுத்துவிட்டார் என்றாலும் எனக்கு தெரியாது.

அதன் பேரில் 2 ம் வாதி 1 ம் வாதிக்கு வா.சா.ஆ 1 ஏற்படுத்திய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உயில் இருக்கும் விவரம் 7 வருடங்களுக்கு முன் தெரியும் என்று கூறியுள்ளேன் பட்டா மாற்றம் செய்ய ஏற்பாடு செய்தேனா என்றால் அதற்குள் வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள் , அதனால் செய்யவில்லை. வழக்கு சொத்தில் எனக்கு பாகம் உள்ளது என சொல்லுகிறேனா என்றால் இல்லை, தபசில் சொத்து இருக்கும் வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன்.

2 ம் வாதி எனது கணவரின் சகோதரர் என்பதால் தபசில் சொத்தின் வீட்டில் என்னை குடியிருக்க அனுமதித்தார் என்றால் சரியல்ல. நான் சொல்லும் உயில் பதிவு செய்யப்படாததால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயிலில் குறிப்பிட்டுள்ள சொத்தின் கதவு எண்ணும், பிராது தபசில் சொத்தின் கதவு எண்ணும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. தபசில் சொத்து எனக்கு பூர்விகமாக

பாத்தியப்படவில்லை என்றாலும் 2 வாதிக்கும் அவரது சகோதரர் இசக்கியப்பனுக்கும் பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

வழக்கு அனுமதிக்கக்கூடியது என்றாலும் வாதி கேட்கக்கூடிய பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றாலும் சரியல்ல.